பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**26 12 2025** **FRIDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. வீரச் சிறார் தினத்தையொட்டி, புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி உரையாற்றுகிறார்.

2. இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்க கூட்டுறவு அமைச்சகம் முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

3. விவசாயிகள் நலனுக்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு லட்சத்து 94 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

4. தமிழகத்தில் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. இந்தியா - இலங்கை அணிகளுக்கு இடையேயான மூன்றாவது மகளிர் ட்வெண்டி - ட்வெண்டி கிரிக்கெட் போட்டி திருவனந்தபுரத்தில் இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>

வீரச் சிறார் தினத்தையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்கிறார்.

பாரத் மண்டபத்தில் பிற்பகல் **12.15-**க்கு நடைபெறும் நிகழ்ச்சியில் அவர் உரையாற்ற உள்ளார்.

சீக்கிய மதத்தின் குரு கோவிந்த் சிங்கின் புதல்வர்களின் தியாகத்தை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் **26-**ஆம் தேதி வீரச் சிறார் தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

இந்த நிகழ்ச்சியின்போது, வீரச் சிறார் விருது பெற்ற சிறுவர்களுடனும் திரு நரேந்திர மோடி கலந்துரையாட உள்ளார்.

<<<<<>>>>>>

இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களை ஊக்குவிக்க கூட்டுறவு அமைச்சகம் முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் ரேவாவில் விவசாயிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், இயற்கை விவசாயத்தின்மூலம், விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் என்றார்.

தற்போது நாடு முழுவதும் **40** லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள், இயற்கை முறையிலான சாகுபடி பணிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை வேளாண் உற்பத்திப் பொருட்களுக்கு சான்றளிக்க இரண்டு பெரிய கூட்டுறவு அமைப்புகள் நிறுவப்பட்டுள்ளதாகவும், இவற்றின்மூலம் **400**-க்கும் மேற்பட்ட ஆய்வகங்களின் வாயிலாக சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இயற்கை முறையிலான உற்பத்திப் பொருட்கள் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தும் என்பதால், உலகம் முழுவதும் இதற்கு வரவேற்பு அதிகரித்துள்ளதாக திரு அமித் ஷா தெரிவித்தார்.

<<<<<>>>>>>

விவசாயிகள் நலனுக்காக கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒரு லட்சத்து **94** ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து மாநில வேளாண் அமைச்சர் திரு எம் ஆர் கே பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில், விவசாயிகள் நலனுக்காக பல்வேறு புதிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறியுள்ளார்.

இதன் ஒருபகுதியாக, பல்வேறு இடங்களில் வேளாண் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலையில் நாளை முதல் இரண்டு நாட்கள் நடைபெறும் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகளில் விவசாயிகள் பங்கேற்று பயனடைய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>>>

தமிழகத்தில் குற்றங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

கிருஷ்ணகிரியில் நேற்றிரவு பிரச்சாரம் மேற்கொண்ட அவர், திமுக ஆட்சியில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 15 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும், பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 52 சதவீதம் அதிகரித்துள்ளதாகவும் கூறினார்.

விவசாயிகளுக்கு அளித்த தேர்தல் வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றத் தவறி விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கிருஷ்ணகிரி மாவட்ட மா விவசாயிகள் நலனில் திமுக அரசு அக்கறை செலுத்தவில்லை என்றும் அவர் கூறினார்.

மரவள்ளி, மஞ்சள் உள்ளிட்டவற்றுக்கு ஆதரவு விலை தரப்படும் என்று கூறிய வாக்குறுதியை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்று அவர் குற்றம் சாட்டினார்.

மத்திய அரசின் திட்டங்களால் கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் அதிக அளவில் பயன் அடைந்திருப்பதாக அவர் கூறினார்.

இந்த மாவட்டத்தில் ஒரு லட்சத்து 75 ஆயிரம் விவசாயிகள் பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தில் பயன் அடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இந்த மாவட்டத்தில் மண் வள அட்டைத் திட்டத்தால் 23 ஆயிரம் விவசாயிகள் பயன் அடைந்துள்ளதாகவும் திரு நயினார் நாகேந்திரன் கூறினார்.

*<<<<<>>>>>>*

இலங்கை கடற்படையால் கடந்த மாதம் கைது செய்யப்பட்ட ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த நான்கு மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இன்று அதிகாலை நாகை மாவட்டம் வேதாரண்யத்திற்கு வந்தடைந்த நிலையில், அங்கிருந்து சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வன் ஜெபராஜ் - 54 Sec.)***

*<<<<<>>>>>>*

கேரளாவின் ஆலப்புழா மற்றும் கோட்டயம் மாவட்டங்களில் பறவைக்காய்ச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதையடுத்து, தமிழகத்தின் நாமக்கல் மாவட்டத்தில் கோழிப் பண்ணைகளில் கண்காணிப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கென கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் அதிவிரைவுப் படைகள் அமைக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — கண்ணன் — 60 Sec.)***

<<<<<>>>>>>

*இருவரிச் செய்திகள்*

கிழக்கு உக்ரைனில் உள்ள ஸ்வியாடோ-போக்ரோவ்ஸ்கே பகுதியை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளதாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

---------------------------------

தான்சானியாவின் கிளிமாஞ்சாரோ மலைப்பகுதியில் நேரிட்ட ஹெலிகாப்டர் விபத்தில் 5 பேர் உயிரிழந்தனர்.

-------------------------

விடுதலைப் போராட்ட வீரரும், கல்வியாளருமான மதன்மோகன் மாளவியாவின் பிறந்த தின நிகழ்ச்சி நேபாளத்தில் இந்திய தூதரகம் சார்பில் நடைபெற்றது.

-------------------

குஜராத்தின் வத்வாவில் கட்டப்பட்டுள்ள ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் புதிய வளாகத்தை மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா இன்று திறந்து வைக்க உள்ளார்.

-----------------------

நீதிமன்றங்களுக்கு வெளியே தகராறுகளுக்கு தீர்வு காண்பது தொடர்பாக, இரண்டு நாட்கள் நடைபெறும் தேசிய மத்தியஸ்த மாநாட்டை உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூர்ய காந்த் கோவாவில் இன்று தொடங்கி வைக்கிறார்.

-------------------

**2004**-ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதையொட்டி சுனாமியில் உயிரிழந்தவர்களுக்கு பல்வேறு இடங்களில் அஞ்சலி நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

--------------------

கள்ளக்குறிச்சியில் இன்று நடைபெறும் அரசு நிகழ்ச்சியில் முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் பங்கேற்று, ஆயிரத்து 773 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டப் பணிகளைத் தொடங்கி வைக்கிறார்.

-------------------

தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் அலுவலகத்தில் இன்று நடைபெறும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி.பிரியங்கா பங்கஜம் தெரிவித்துள்ளார்.

------------------

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி நிறுவனத்தின் சென்னை மண்டல அலுவலகத்தின் சார்பில் சென்னை, செங்கல்பட்டு உள்ளிட்ட 8 மாவட்டங்களில் சிறப்பு முகாம் வரும் 29-ம் தேதி நடைபெறும் என்று அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

------------

சென்னையில் 4 ஆயிரத்து 79 வாக்குச் சாவடி மையங்களில் நாளை மற்றும் நாளை மறுநாள், ஜனவரி 3 மற்றும் 4-ம் தேதிகளில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளதாக மாநராட்சி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

பள்ளி மாணவர்களுக்கு இடையேயான **69**-ஆவது தேசிய டேபிள் டென்னிஸ் போட்டி பெரம்பலூரில் இன்று தொடங்குகிறது.

இதில் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த மாணவ, மாணவியர் பங்கேற்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — செல்வராஜ் — 37 Sec. )***

---------------

இந்தியா — இலங்கை இடையேயான மூன்றாவது மகளிர் டுவென்டி — டுடிவன்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது

திருவனந்தபுரத்தில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளை கொண்ட இந்த தொடரில், ஏற்கனவே நடைபெற்ற இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்று இந்தியா முன்னிலையில் உள்ளது.

**<<<<<END>>>>>**